තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ කොමිෂන් සභාව
தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழு
**RIGHT TO INFORMATION COMMISSION**
**(CONSTITUTED UNDER THE ACT, No 12 OF 2016)**

කාමර අංක 203-204 ,බණ්ඩාරනායක ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලා පරිශ්‍රය, බෞද්ධාලෝක මාවත කොළඹ 07
அறை இல 203-204, பிஎம்ஐசிஎச் ,பௌத்தாலோக்க மாவத்தை , கொழும்பு 07.
Room No 203-204, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 07


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது<br>My No | RTIC/AD/MA1/03/11/2025 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 20.11.2025 |

## பொது அறிக்கை; இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு

**20 நவம்பர் 2025**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடையும் (2026) தருணத்தை இலங்கை அணுகிக் கொண்டிருக்கிறது. உலகின் சிறந்த சட்டங்களிலொன்றாக மதிப்பிடப்பட்ட இந்தச் சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் அரச மற்றும் அரச அல்லாத அமைப்புகளிடமிருந்து தகவலைப் பெறும் தமது உரிமையைப் பயன்படுத்தியுள்ளனர்.

இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் வெளிப்படைத்தன்மைக்கான கொள்கைகளை மேன்முறையீட்டு நீதிமன்றங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

2020 ஆம் ஆண்டு, ஐ.நா. உயர் மட்ட அரசியல் மேடைக்கான UNESCO-வின் உலக அறிக்கையில் ('வாக்குறுதியிலிருந்து நடைமுறைக்கு...') RTIC முன் நடைபெற்ற முக்கிய வழக்குகள் மூலம் தகவல் வெளிப்படுத்தப்பட்ட விதத்தைச் சுட்டிக்காட்டி இலங்கையை "சிறந்த நடைமுறை" மாதிரியாக பாராட்டியுள்ளது. உலக வங்கியும் இலங்கை அரசாங்கத்திற்கு "வெளிப்படைத்தன்மைக்கு முதன்மை" வழங்குமாறு வலியுறுத்தியுள்ளது. சர்வதேச நாணய நிதியமும் (IMF), பொது அதிகாரங்களில் "முளைக்கத் தொடங்கிய வெளிப்படைத்தன்மை கலாசாரத்தை" உருவாக்கிய RTIC-ன் முயற்சிகளை அங்கீகரித்துள்ளது (இலங்கையின் ஆட்சியியல் பற்றிய பகுப்பாய்வு அறிக்கை, செப்டம்பர் 2023).

இந்த முன்னேற்றமான வளர்ச்சிகள் இருந்தபோதும், தன் அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் கடுமையான பணியாளர் பற்றாக்குறை குறித்து RTIC தீவிர கவலை வெளிப்படுத்துகிறது. RTI சட்டம் பொறுப்புகளை இரண்டு அமைப்புகளுக்கு பிரிக்கிறது, மேல்முறையீடுகளை விசாரிக்கும் முதன்மை பொறுப்பு கொண்ட RTIC, மற்றும் சட்டம் 'திறம்பட நடைமுறைப்படுத்தப்படுவதை' (பிரிவு 2) உறுதிப்படுத்த வேண்டிய நோடல் ஏஜென்சி அதாவது **பொது ஊடக துறை ஒதுக்கப்பட்ட அமைச்சு.**

பொறுப்புகளை இரண்டு அமைப்புகளுக்கு பிரிக்கிறது, மேல்முறையீடுகளை விசாரிக்கும் முதன்மை பொறுப்பு கொண்ட RTIC, மற்றும் சட்டம் 'திறம்பட நடைமுறைப்படுத்தப்படுவதை' (பிரிவு 2) உறுதிப்படுத்த வேண்டிய நோடல் ஏஜென்சி அதாவது **பொது ஊடக துறை ஒதுக்கப்பட்ட அமைச்சு.**

பிரிவு 41 இன் கீழ், நோடல் ஏஜென்சி வெளியிடும் RTI விதிகள் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாறாக, பிரிவு 42, அதே வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (அதிவிசேஷ **வர்த்தமானி எண் 2004/66) கட்டணங்கள் மற்றும் மேன்முறையீட்டு நடைமுறைகள் தொடர்பான ஆணைக்குழுவின் விதிகள்,** பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சட்டப்பூர்வ கட்டாயம் இல்லை என்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் **இரு வேறு நடைமுறைகள்** பயன்படுத்தப்படுகின்றன.

RTIC மற்றும் நோடல் ஏஜென்சி, **சட்டத்தின் செயல்திறனை அதிகப்படுத்த ஒருமித்த முறையில் செயல்பட வேண்டும்** என்றாலும், **மேன்முறையீடுகளில் தரப்புகளாக RTIC முன் வரவழைக்கப்படும் பொது அதிகாரிகளிடமிருந்து தனது சுயாதீனத்தைப் பேணும்** குறிப்பான **கடமை RTIC இற்கு உள்ளது.** குறிப்பாக, **பணியாளர்களை சுயாதீனமாக ஆட்சேர்ப்பு செய்தல்** மற்றும் **தனிப்பட்ட நிதி (பிரிவுகள் 13(3) மற்றும் 16) ஏற்படுத்தப்படுதல்** ஆகியவை ஆணையக்குழுவின் **நிதி சுயாதீனத்தைக்** காக்கும். இது இல்லையெனில், **செயல்பாட்டு சுயாதீனம் இருக்காது.**

இத்தகைய சட்ட பாதுகாப்புகளை தொடர்ச்சியான அரசுகள் புறக்கணித்திருப்பது வருத்தத்திற்குரியது. எந்தவொரு அர்ப்பணிப்பு நிதியும் இயங்க அனுமதிக்கப்படவில்லை. அதிகரித்து வரும் மேல்முறையீட்டு சுமையை நிர்வகிக்க ஆணையம் மிகக் குறைந்த பணியாளர்களுடன்—ஒரு சட்ட அதிகாரி மற்றும் இரண்டு சட்ட உதவியாளர் (பின்னர் மூன்றாக அதிகரிக்கப்பட்டது) செயல்பட்டு வருகிறது.

கூடுதல் சட்ட ஊழியர்கள் மற்றும் IT உதவியாளர் **போன்ற நடுத்தர நிலை பணியாளர்கள் உட்பட பிற அத்தியாவசிய பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதி தொடர்பாக RTIC முன்வைத்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.** RTIC தனது பணியாளர் கோரிக்கைகளை **நோடல் ஏஜென்ஸியின் மூலம்** நிதி அமைச்சகத்திற்கு அனுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் போது, **இந்த செயல்முறை காரணமில்லாமல் தாமதப்படுத்தப்பட்டுள்ளது**, மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் **எட்டு மாதங்கள் வரை தாமதமானது**.

மேலும், **2017 ஆம் ஆண்டின்** பட்ஜட் ஒதுக்கீட்டிற்குதற்கு **ஏற்ப, தேசிய பட்ஜெட்டில் RTIC க்கு தனியான வரிசை ஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டிய அவசியம்** இருப்பதாக RTIC பல முறை அரசிற்கு தெரிவித்துள்ளது. அந்த ஒதுக்கீடு பின்னர் நீக்கப்பட்டு, **நோடல் ஏஜென்சியின் கீழ் வைத்ததால்**, RTIC இன் **நிதி மற்றும் செயல்பாட்டு சுயாட்சி பாதிக்கப்பட்டுள்ளது. இதுவும் இதுவரை புறக்கணிக்கப்பட்டுள்ளது.**

மேலும், **எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அஜித் பி. பெரேரா அவர்கள் எழுப்பிய** பாராளுமன்ற கேள்விக்கு பதிலாக **RTIC அலுவலகம் 2025 அக்டோபர் 15 அன்று சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் ஊடக அமைச்சகத்திற்கு அனுப்பிய சிங்கள பதிலின் தவறான ஆங்கில மொழிபெயர்ப்பை** பயன்படுத்தி **2025 நவம்பர் 11 அன்று வெளியிடப்பட்ட தவறான ஊடகச் செய்திகள் காரணமாக RTIC இன் மேன்முறையீட்டுச் செயற்பாட்டிற்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது**.

இந்த தவறான ஊடக அறிக்கைகள் சார்ந்திருக்கும் அந்த ஆங்கில மொழிபெயர்ப்பு எங்கு உருவானது என்பது குறித்து RTIC இதுவரை அறியாமல் உள்ளது.

**அந்த அறிக்கைகள் தவறாகக் குறிப்பிடுவது** 2025 ஜனவரி 1 முதல் செப்டம்பர் 30 வரை RTIC **308 'தகவல் கோரிக்கைகளுக்கு' பதில் அளிக்க தவறிவிட்டது** என்றும், அதேபோல் 2024 ஆம் ஆண்டில் '**112 கோரிக்கைகளுக்கு'** பதில் அளிக்கவில்லை என்றும். மேலும், **'**கவனிக்கப்படாத **கோரிக்கைகள்' 2025 இல் அதிகரித்துள்ளன** என்றும் (அதன் விளைவாக) ஆணையத்தின் **நிதி ஒதுக்கீடு 'குறைக்கப்பட்டுள்ளது'** என்றும் அவை தெரிவிக்கின்றன. குறிப்பிடப்பட்ட தகவல்கள் தவறானவை, ஏனெனில் எந்த மேல்முறையீடும் 'பராமரிக்கப்படாமல்' விடப்படவில்லை; அவை 'ஒத்திவைக்கப்பட்டவை' மட்டுமே. மேலும், RTIC இன் பட்ஜெட்டில் எந்தவிதக் குறைப்பும் **ஏற்படவில்லை.**

**2025 அக்டோபர் 15 ஆம் தேதி**, மேல்முறையீட்டு புள்ளிவிவரங்களைக் கேட்ட ஒரு வழக்கமான பாராளுமன்ற கேள்விக்குப் பதிலளிக்கும் பொருட்டு **2025 ஜனவரி 1 முதல் 2025 செப்டம்பர் 30 வரை பெற்ற 1306 மேல்முறையீடுகளில் 308 மேல்முறையீடுகள் 'ஒத்திவைக்கப்பட்டுள்ளன'** என்று**, சுகாதாரம் மற்றும் பொது ஊடக அமைச்சகத்தின் ஊடாக** இயக்குநர் ஜெனரலின் கையொப்பத்துடன் RTIC அலுவலகம் பதிலளித்தது.

**2025 செப்டம்பர் 30 வரை**, RTIC **(1306 மேல்முறையீடுகளில்) 1157 மேல்முறையீடுகளுக்கு இறுதித் தீர்ப்புகள் வழங்கி, அவற்றை நிறைவு செய்துள்ளது**. 308 மேன்முறையீடுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

மேன்முறையீட்டு விசாரணைகளில் இது ஒரு சாதாரண நடைமுறையாகும்; சிக்கலான சட்டப் பிரச்சினைகள், தரப்புகளின் கோரிக்கைகள் போன்ற நியாயமான காரணங்களால் விசாரணைகள் ஒத்திவைக்கப்படலாம். "ஒத்திவைக்கப்பட்ட" விசாரணைகளை "கவனிக்கப்படாதவை" என்று கூறுவது மிகத் தவறான சித்தரிப்பாகும். **RTIC இந்த அறிக்கைகளை**, அதன் **அரையுரிமைத் தீர்ப்பாய (quasi-judicial) மேல்முறையீட்டு செயல்பாட்டில் திட்டமிட்ட தலையீடாகக்** காணுகிறது.

பொதுவாக, ஒத்திவைக்கப்பட்ட மேன்முறையீடுகள் ஆண்டின் மீதமுள்ள காலத்தில் தீர்க்கப்படுகின்றன அல்லது விசாரணைகளை முடிப்பதற்காக அடுத்த ஆண்டிற்கு மாற்றப்படுகின்றன. உதாரணமாக, 2025 நவம்பர் 15 ஆம் தேதியளவில், ஒத்திவைக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 244 ஆகக் குறைந்திருந்தது. இதனுடன் தொடர்பாக, RTIC அலுவலகம் பெற்ற மேன்முறையீடுகள் 1538 ஆக உயர்ந்திருந்தன மற்றும் முடிக்கப்பட்ட மேல்முறையீடுகள் 1304 ஆக இருந்தன. மேலும், தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளின் எண்ணிக்கையில் எந்தவித குறைவும் **ஏற்படவில்லை.**

**அதன்** நிதி ஒதுக்கீட்டில் எந்தக் குறைப்பும் **ஏற்படவில்லை** என்பதை RTIC மேலும் தெளிவுபடுத்துகின்றது. 2025 அக்டோபர் 23 ஆம் தேதியிட்ட ஹான்சார்டில், மேற்கண்ட பாராளுமன்றக் கேள்விக்கான பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள பட்ஜெட் ஒதுக்கீடுகள் RTIC இன் ஒதுக்கீடுகள் அல்ல. RTIC இன் உண்மையான பட்ஜெட் ஒதுக்கீடுகள் பொதுவாகக் கிடைக்கின்றன. இதனை கீழே உள்ள இணைப்பில் காணலாம்:
https://www.rticommission.lk/web/images/pdf/Budget/Annual-Budgetary-Allocation-and-Expenses.pdf

**இத்தகைய தவறான வழிநடத்தும் செய்தி அறிக்கைகள் தொடர்பாக**, RTIC **2025 நவம்பர் 13 அன்று தமது பதிலுரை வழங்கும் உரிமையைப் பயன்படுத்தியது**. எனினும், **செய்தித்தாள்கள் இதுவரை அந்தப் பதிலை வெளியிடத் தவறியுள்ளன**, இது **செய்தித்தாள் நெறிமுறைக் கோட்பாட்டை மீறும்** செயல் ஆகும். இதனால் **RTIC ஒரு பொது அறிக்கை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது**.

**முடிவாக, தகவல் பெறும் உரிமையின் தன்மையை பலவீனப்படுத்தும் வகையில்** இலங்கையின் RTI சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கான எந்த முயற்சியும் **குடிமக்களுக்குக் கேடு விளைவிக்கும்** என்றும், **அரசியலமைப்பு சட்டத்தின் 14A பிரிவைப் பாதிக்கும்** என்றும், இதுவரை RTI அமைப்பின் கீழ் கிடைத்த **முன்னேற்றமான பயன்களுக்கு ஒரு மிகப்பெரிய பின்னடைவு** என்றும் RTIC வலியுறுத்துகிறது.

திரு. கே.டி.எஸ். ருவன்சந்திர
இயக்குநர் ஜெனரல், RTIC
(இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு சார்பாக)